## O.S. No.21/2019

12.11.2024

**வா.சா.1**

**திரு ராஜேந்திரன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கர்ணா கொல்லையில் 3 மாவும் ரோடு பக்கத்தில் 4 மாவும் இந்த வழக்கில் சேர்க்கப்படாமல் உள்ள சொத்துக்கள். இதனை தவிர வேறெந்த சொத்துக்களும் வழக்கில் விடுபட்ட சொத்துக்களாக தெரியவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள உயில் ஆவணத்தின் அசல் ஆவணம் மன்னார்குடி இந்தியன் வங்கியில் உள்ளது. நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் உயில் ஆவணத்தை வாங்குவது சம்மந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான், என்னுடைய தயார், என்னுடைய சகோதரர் ஆகியோர் உயிலில் கண்ட சொத்துக்கள் சம்மந்தமாக அடமான ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்து அந்த தொகையினை நாங்கள் வங்கிக்கு முழுமையாக செலுத்ததாக காரணத்தால் சொத்தின் மேல் நடவடிக்கை எடுப்பது சம்மந்தமாக இந்தியன்

வங்கியால் வழக்கு தொடரப்பட்டு மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அசல் உயில் ஆவணத்தை பார்த்தால்தான் உயில் எந்த தேதியில் ஏற்பட்டது, யார் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்பது பற்றிய விபரங்கள் தெரியும். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் வங்கி தொடர்ந்த வழக்கு நிலுவையில் உள்ளதால் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததற்கு ஏதேனும் தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் இல்லை. ரெகுநாத தேவருக்கு யார் யார் வாரிசுதாரர்கள் என்பதை காட்டுவதற்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவர் சிங்கப்பூரில் இறந்த காரணத்தால் தாக்கல் செய்ய இயலவில்லை. ரெகுநாத தேவருக்கு ஒரு மகள் மட்டும்தான். இந்த வழக்கு சொத்துக்கள் அனைத்தும் என் பாட்டனார் ரெகுநாத தேவர், என் பாட்டி கண்ணம்மாள், என் தாயார் நவநீதம் ஆகியோருக்கு மட்டுமே உரிமையுடையது என்றால் சரிதான். ரெகுநாத தேவருக்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யாத காரணத்தால் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் தவறு. வா.சா.ஆ.2 சாட்சியிடம் கொடுக்கப்பட்டு அதில் சாட்சி கையொப்பமிட்ட நபர்களின் பெயர்களை கண்டறிய இயல்கிறதா என பார்க்க சொன்னபோது அவர் அதை பார்த்து பெத்தையன், த/பெ. துரைசிங்கம், பஞ்சவர்ணம், த/பெ.

தங்கவேல் என தெரிவித்தார். வா.சா.ஆ.2 ல் சாட்சிகளின் விபரம் முழுவதுமாக தெளிவாக படிக்க கூடிய நிலையில் இல்லை என்றால் தவறு. 2009ம் ஆண்டு என் தாயாரும் வீரசிங்கமும் சேர்ந்து சொத்தை விற்றுள்ளார் என்றால் வீரசிங்கத்தின் கையெழுத்து கிடையாது என்றால் சரி. உயிலின் அடிப்படையில் நான் பாக வீதம் கோரும்போது உயில் சட்டப்படி செல்லக்கூடியது என்று விளம்புகை பரிகாரம் கோராமல் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் தவறு. எனது சகோதரிகளையும் விசாரித்தால்தான் உயில் ஆவணம் ஏற்பட்டதா உண்மையானதா என்பது குறித்து விபரங்கள் தெரிவிக்க என் சகோதரிகளுக்கும் உரிமையுண்டு என்றால் தவறு. எனது பாட்டனார், பாட்டியார், தயார் ஆகியோருக்கு எனது சகோதரிகளும் வாரிசுதாரர்கள் என்று சொன்னால் சரிதான். எனக்கு 6 சகோதரிகள் உள்ளனர். இந்த வழக்கில் என் சகோதரிகள் அவசிய தரப்பினர்கள் என்றும் அவர்களை சேர்க்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்தது பிழை உடையது என்றால் தவறு. வங்கியில் கடன் இருப்பதையும் உயில் ஆவணத்தின் அசல் வங்கியில் உள்ள விபரத்தையும் மறைத்து தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் தவறு. தாவா வழக்கில் சேர்க்க வேண்டிய சொத்துக்களை சேர்க்காமல் பகுதி பாகப் பிரிவினை கோருவது ஏற்புடையதல்ல என்றால்

தவறு. வாரிசுதாரர்கள் 8 நபர்கள் உள்ள நிலையில் நான் மட்டும் 1ன் கீழ் 2 பாகம் சொத்து கேட்கக் கூடியது சரியானதல்ல என்றால் தவறு. நான் தாக்கல் செய்த வழக்கு பிரதிவாதிகளை பொறுத்து தள்ளுபடி செய்யக் கூடியது என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

P SELVA MUTHU KUMARI
Digitally signed by P SELVA MUTHU KUMARI
Date: 2024.11.12 14:56:20 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.